

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (10.1.2026) பெரம்பூர், டான்பாஸ்கோ பள்ளி வளாகத்தில் நடைபெற்ற பொங்கல் விழாவில், கழக நிர்வாகிகளுக்கு பொங்கல் பரிசுகளை வழங்கி விழாப் பேருரையாற்றினார். இவ்விழாவில், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் டாக்டர் கலாநிதி வீராசாமி, கிரிராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, ஜோசப் சாமுவேல், வெற்றியழகன், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் தலைவர் ரங்கநாதன், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் ரவிச்சந்திரன், மண்டல குழுத் தலைவர் திருமதி சரிதா மகேஷ்குமார், பகுதிச் செயலாளர்கள் ஐ.சி.எப். முரளிதரன், நாகராஜன், மாமன்ற உறுப்பினர் பரிதி இளம்சுருதி உள்ளிட்ட மாமன்ற உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



2.22 கோடி குடும்பங்களுக்கு பொங்கல் தொகுப்புடன் ரூபாய் 3,000 ரொக்கபரிசு வழங்கும் திட்டத்தினை சென்னையில் தமிழ்நாடு முதலமைச்சர், கழக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்த நிலையில், திருப்பூர் கிழக்கு மாவட்டம், தாராபுரம் சட்டமன்ற தொகுதி தாராபுரம் நகரத்தில் உள்ள நியாயவிலைக் கடையில் மனிதவள மேலாண்மை துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணை செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ் தொடங்கி வைத்தார். இதில் நகர கழக செயலாளர் சு.முருகானந்தம், நகர்மன்ற தலைவர் கு.பாப்புக்கண்ணன் உள்பட நகர கழக துணை செயலாளர்கள், மாநில, மாவட்ட, நகர கழக நிர்வாகிகள், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்கள், நகர்மன்ற உறுப்பினர்கள், சார்பு அணிகளின் மாவட்ட, நகர அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள், இந்நாள், முன்னாள் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### மக்களிடம் ஏகோபித்த வரவேற்பு! ‘திராவிட மாடல்’ ஆட்சியின் சாதனை! 2 நாளில்

# பொங்கல் பரிசுத் தொகை ரூ.3348 கோடி விநியோகம்!

## 1 கோடியே 11 லட்சம் குடும்ப அட்டைதாரர்களுக்கு நியாய விலைக் கடைகள் மூலம் வழங்கல்!

**சென்னை, ஜன. 12 -**

**அரிசி குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் முகாம்வாழ் இலங்கை தமிழர்கள் குடும்பங்களுக்கு 10.1.2026 அன்று காலை 10 மணி வரை 24,924 நியாய விலைக் கடைகளில் உள்ள 1,11,61,979 குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் ரொக்கத் தொகை ரூ.3348.59 கோடி விநியோகம் செய்யப்பட்டுள்ளது.**

தமிழர் திருநாளாம் தைப் பொங்கல் 2026 திருநாளை மக்கள் அனைவரும் சிறப்பாகக் கொண்டாடும் வகையில், தமிழ்நாடு அரசு 2,22,91,710 எண்ணிக்கையிலான அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பங்களுக்கும் பொங்கல் பரிசுத் தொகுப்பாக ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை மற்றும் ஒரு முழு நீளக்கரும்பு வழங்கப்படும் எனவும், பொங்கல் திருநாளை மேலும் சிறப்பாக கொண்டாட அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பங்களுக்கும் ரொக்கப் பரிசாக ரூ.3,000/ வழங்கப்படும்” எனவும் முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 8.1.2026 சென்னை, பட்ரோடு நியாய விலைக் கடையில் அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசுத் தொகுப்பினையும், வேட்டி, சேலைகளையும் வழங்கி, தொடங்கி வைத்தார்.

மேலும், துணை முதலமைச்சர் அவர்கள் சென்னை, சிந்தாதரிப்பேட்டை TUCS நியாய விலைக் கடையிலும், அந்தந்த மாவட்டத்தில் அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் மூலமாக இத்திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது.

தமிழ்நாடு முழுவதும் அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பத்தினர் ஆகியோர்களுக்கு 2026 பொங்கல் பரிசுத் தொகுப்பிற்கான டோக்கன்கள் குடும்ப அட்டைதாரர்களுக்கு 04.01.2026 முதல் 07.01.2026 வரை தொடர்புடைய நியாய விலைக் கடைப் பணியாளர்களால் வழங்கப் பட்டது.

இதில், முதல் நாள் 200 குடும்ப அட்டைத்தாரர்களும், இரண்டாம் நாள் 300 முதல் 400 வரையிலான குடும்ப அட்டைதாரர்கள் பொங்கல் பரிசுத் தொகுப்பு பெறுவதற்கு ஏதுவாக தொடர்புடைய நியாயவிலைக் கடைப் பணியாளர்களால் டோக்கன்கள் விநியோகம் செய்யப்பட்டது. 10.1.2026 அன்று காலை 10 மணி வரை 24,924 நியாயவிலைக் கடைகளில் உள்ள 1,11,61,979 குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் ரொக்கத் தொகை ரூ. 3348.59 கோடி விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு கூட்டுறவுத்துறை செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

### திருப்பரங்குன்றம் மலை தீப விவகாரம்:

## தி.மு.க. ஒருபோதும் நீதிமன்ற அவமதிப்பில் ஈடுபடாது!

### புதுக்கோட்டையில் அமைச்சர் எஸ்.ரகுபதி பேட்டி!

*புதுக்கோட்டை, ஜன. 12 -*

புதுக்கோட்டை மன்னர் கல்லூரியில் ‘‘உலகம் உங்கள் கையில்’’ என்ற திட்டத்தின் கீழ் மாணவ, மாணவிகளுக்கு இலவச மடிக்கணினிகளை அமைச்சர்கள் எஸ்.ரகுபதி. சிவ. வீ.மெய்யநாதன் ஆகியோர் வழங்கினர்.

பின்னர், அமைச்சர் எஸ்.ரகுபதி நிருபர்களிடம் கூறியதாவது:



சென்னையில் செய்தியாளர்களைச் சந்தித்த போது திருப்பரங்குன்றம் விவகாரத்தில் நான் பேசியதில் எந்தவித நீதிமன்ற அவமதிப்பும் இல்லை. பிணத்தைச் சுடு காட்டில் தான் எரிக்க வேண்டும் என்பது பொதுவான விதி. ஒருவர் நடுரோட்டில்தான் பிணத்தை எரிப்பேன் என்று பிடிவாதம் பிடித்தால் அதனை அனுமதிக்க முடியுமா?

ஏற்கனவே நீதி மன்றங்கள் வழங்கிய தீர்ப்புகளின் அடிப்படையிலேயே, ஆதாரத்துடன் நான் கருத்துத் தெரிவித்தேன். இது வாதத்திற்காகச் சொல்லப்பட்ட ஒரு உதாரணமே தவிர, யாரையும் அநாகரிகமாகப் பேசவில்லை.

திருப்பரங்குன்றம் கோவில் தூணில் தீபம் ஏற்றியதற்கு ஏதேனும் வரலாற்று ஆதாரம் உண்டா? என்றுதான் நாங்கள் கேள்வி எழுப்பினோம். ஆனால் அதற்குப் பதில் கூறாமல், உண்மையை நிரூபிக்கத் தவறி வருகின்றனர். இந்த விவகாரத்தில் உயர்நீதி மன்றம் அளித்த உத்தரவை எதிர்த்து, தமிழக அரசு சார்பில் விரைவில் உச்சநீதி மன்றத்தில் மேல்முறையீடு செய்யப்படும்.

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மக்கள் நலத்திட்டங்கள் மூலம் தொடர்ச்சியாக சிக்சர் அடித்து வருகிறார். ஆனால். எடப்பாடி பழனிச்சாமியும், அமித்ஷாவும் தொடர்ச்சியாக நோபால் வீசி வருகின்றனர். மத்திய அமைச்சர் அமித்ஷா தமிழகத்திற்கு எத்தனை முறை வந்தாலும், இங்கு எந்த மாற்றமும் நிகழப்போவதில்லை.

அ.தி.மு.க.வினர் ஆளுநரிடம் ஊழல் பட்டியல் அளிப்பது என்பது தேர்தல் நேரத்தில் அவர்கள் வழக்கமாகச் செய்யும் ஒரு நாடகம். நாங்கள் எந்தத் தவறும் செய்யவில்லை. மாறாக, அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர்கள் மீதுதான் பல்வேறு ஊழல் வழக்குகள் நிலுவையில் உள்ளன. நீதிமன்றத்தின் மீது தி.மு.க.விற்கு பெரும் மதிப்பும், மரியாதையும் உண்டு. எவ்வளவு பெரிய பாதிப்பு வந்தாலும் தி.மு.க. ஒருபோதும் நீதிமன்ற அவமதிப்பில் ஈடுபடாது.

இவ்வாறு அவர் கூறினார்.



தருமபுரி மேற்கு மாவட்டம் பாப்பிரெட்டிப்பட்டி பி.பள்ளிபட்டியில் சமூக நீதிக்கான திருவிழாக் கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக மேற்கு ஒன்றிய செயலாளர் பி.எஸ்.சரவணன் ஏற்பாட்டில் நடைபெற்ற மாபெரும் கிரிக்கெட் விளையாட்டு போட்டியினை தருமபுரி மேற்கு மாவட்ட கழக செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன் துவக்கி வைத்தார்.உடன் பங்கு தந்தை அருட்ஜோதி,ஒன்றிய சார்பு அணிகளின் நிர்வாகிகள் பி.தினேஷ், வினோத், கார்த்திக்,கி.தினேஷ், கௌதம் குமார்,அருண் பாபு, சூர்யா,சாக்ரடீஸ் உள்ளிட்ட திமுகவினர்,ஏராளமான இளைஞர்கள்,பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

### ‘வெல்லும் பெண்கள்’ டெல்டா மண்டல மகளிர் மாநாடு!

## பெருந்திரளாக பெண்களை பங்கேற்க செய்வோம்!

### திருவாரூர் மாவட்டக் கழகச் செயல்வீரர்கள் கூட்டத்தில் தீர்மானம்!

திருவாரூர், ஜன12.

தஞ்சாவூர் செங்கிப்பட்டியில் நடைபெறும் டெல்டாமண்டல வெல்லும் பெண்கள் மகளிர் மாநாட்டில் திருவாரூர் மாவட்டத்திலிருந்து பல்லாயிரக்கணக்கில் மகளிர்கள்

பங்கேற்றும், பங்கேற்க செய்தும் மாநாட்டை வெற்றிபெற செய்வோம் என மாவட்ட செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ.அவர்கள் பங்கேற்ற செயல்வீரர்கள் கூட்டத்தில் தீர்மா னிக்கப்பட்டது.

அவைத்தலைவர் க.தன்ராஜ் அவர்கள் தலைமையில் நடைபெற்ற மாவட்ட செயல்வீரர்கள் கூட்டத் திற்கு மாவட்ட துணை செயலாளர்கள் எம்.எஸ்.கார்த்திக், எம்.ராமகிருஷ்ணன், சாந்திபாஸ்கர், மு.வெங்கடேசன் ,தேர்தல் பார்வையாளர்கள் சௌமியன் வைத்யநாதன், ஜெகவீரபாண்டியன், ராஜா சீனிவாசன் உள்ளிட்டோர் முன்னிலை ஏற்றனர்.

கூட்டத்தில் நிறை வேற்றப்பட்ட தீர்மானங்கல் பின்வருமாறு,

தமிழ்நாடு முதல்வர் திராவிட நாயகர் மு.க. ஸ்டாலின் , துணை முதல்வர் எதிர்கால தமிழ்நாட்டின் நம்பிக்கை உதயநிதி ஸ்டாலின் ஆகியோர்களின் வழிகாட்டுதல்களின் படி திருவாரூர் மாவட்டத்தில் ஒன்றிய, நகர பகுதிகளில் நடைபெற்ற திராவிட பொங்கல் விளையாட்டுப் போட்டிகளில் வென்றோர்களுக்கான, மாவட்ட அளவிலான போட்டிகளை ஜனவரி 12 மற்றும் 13ஆகிய தேதிகளில் நடத்தி பரிசு, சான்றிதழ், கோப்பைகளை வழங்குவது ,மாவட்ட அளவில் வெற்றி பெற்ற அணிகளை மாநில இறுதிப்போட்டிகளுக்கு அனுப்பு வது.

எதிர்வரும் பொங்கல் திருநாளை திராவிட பொங்கலாக அறிவித்து சிறப்பித்த நமது முதல்வர் அவர்களின் புகழுக்கு மேலும் பெருமை சேர்க்கும் வண்ணம் பொங்கல் திருநாளில் வாசலெங்கும் ”சமத்துவம் பொங்கட்டும், தமிழ்நாடு வெல்லட்டும் என கோலமிட்டு சிற ப்பித்து, சிற்சிறு விளை யாட்டு போட்டிகள் நடத்தி பரிசுகள் வழங்குவது.

முதல்வர் அவர்களின் அறிவுறுத்தலின்படி உழவர் திருநாள், காணும்பொங்கல் விழாக்களை திராவிட இலக்கியத்தின் வாயிலாக மக்களோடு மகிழ்ச்சியாக கொண்டாடி .LED திரைகள் மூலம் மக்களுக்கு திராவிட நாயகர் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பொங்கல் சிறப்பு செய்திகளை பொதுமக்களுக்கு கொண்டு செல்வது.

ஜனவரி 26அன்று தஞ்சாவூர் செங்கிப்பட்டியில் நடைபெறவுள்ள வெல்லும் தமிழ் பெண்கள் டெல்டா மண்டல மகளிர் மாநாட்டில் பெருந்திரளாக பெண்கள் சீருடையுடன் பங்கேற்பது பங்கேற்க செய்வது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.


கூட்டத்தில் மாநில , மாவட்ட ,ஒன்றிய ,நகர ,பேரூர் செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் பெருந்திரளாக பங்கேற்றனர்.

## இன்று (12ம் தேதி) நாகை மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம்!

### மாவட்டக் கழகச் செயலாளர் என். கௌதமன் அறிவிப்பு!

*நாகை, ஜன.12 -*

நாகை மாவட்ட திமுக செயற்குழு கூட்டம். நாகையில் உள்ள மாவட்ட கழக அலுவலகமான தளபதி அறிவாலயத்தில் இன்று 12.1.2026 மாலை 5.00 மணிக்கு மாவட்ட கழக அவைத் தலைவர் ப. செல்வம் தலைமையில் நடைபெறுகிறது. கூட்டத்தில் மாநில, மாவட்டக் கழக நிர்வா கிகள், தலைமை செயற்குழு



உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்கவும்.

1, டெல்டா மண்டல மகளிர் மாநாடு,

2. கழக ஆக்கப்பணிகள் குறித்து ஆலோசனை நடைபெறுகிறது என்று மாவட்டச் செயலாளர் என்.கௌதமன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



திருத்துறைப்பூண்டி நகரக் கழகம் சார்பில் நடைபெற்ற பிரமாண்ட திராவிடப் பொங்கல் விளையாட்டு போட்டிகளை நகர்மன்ற தலைவர் கவிதா பாண்டியன் தலைமையேற்று துவக்கி வைத்தார். நகரச் செயலாளர் ஆர்.எஸ்.பாண்டியன் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்தப் போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவ மாணவிகளுக்கு ஒரு லட்சத்திற்கு மேற்பட்ட ரொக்க பரிசுகளையும் வெற்றி கோப்பைகளையும், நகர செயலாளரும், தலைமை செயற்குழு உறுப்பினருமான ஆர். .எஸ். பாண்டியன் வழங்கினார். மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் ஐ.ஜி.எஸ்.ஜாகிர் உசேன் , இளைஞர் அணி நகர அமைப்பாளர் வசந்த் உள்ளிட்ட நகர நிர்வாகிகள் உடன் பங்கேற்றனர்.